# மஹாகவி ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர்

Dr.P.S.நடராஜன்

(அவர் பிறந்து, வாழ்ந்த காலகட்டம் பற்றிய ஒரு கண்ணோட்டம்))

நம் பாரத புண்ய பூமியில் மக்களின் ஆன்மீக அறிவை வளர்த்து, நன்னெறியில் நடத்திச் சென்று உய்விக்க சங்கரபகவத்பாதர், ராமானுஜர் மத்வர், வித்யாரண்யர், ரமணர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சதாசிவப்ரம்மேந்திரர், முதலான அனேக மஹா புருஷர்கள் அவ்வப்போது அவதரித்துள்ளார்கள். இந்த சந்தர்பத்தில் நாம் ஸ்ரீ தியாகபிரம்மத்தின் அற்புத படைப்பான **"எந்தரோ மஹானுபாவுலு அந்தரிகி வந்தனமுலு" (எத்துணையோ மஹானுபாவர்கள் இவ்வுலகில். அவர்கள் அனைவருக்கும் நமஸ்காரம்)** என்ற கீர்த்தனையை நினைவு கொள்வோம்.

பதினாராம் நூற்றாண்டில் வடஆற்காடு மாவட்டத்திலுள்ள அடையப்பலத்தில், பெரியோர்களால் முறையே பரமேச்வரன், அம்பிகை இவர்களின் அம்சாவதாரமக கருதப்படும் ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர், ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் என்ற இரு மஹான்கள் அவதரித்தர்கள்.

காலஞ்சென்ற எனது தமையனார் ஸ்ரீ பீ. எஸ். கிருஷ்ணன் அவர்கள் ஸ்ரீ நீலகண்டரின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரியற்றிய நூல்களைப்பற்றிய ஆராய்ச்சியில் பல ஆண்டுகள் ஈடுபட்டு, **1958** ம் ஆண்டு "ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும் அவருடைய காவியங்களும்" என்ற நூலை வெளிட்டார்கள். ***சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ மஹா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீமுகம் தந்து அருளினார்கள்.*** ஸ்ரீ ராமேசன் **I.A.S.,** அவர்கள், ஆழ்ந்த ஆராய்ச்சிக்குப்பின் ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரை பற்றிய ஒரு அரிய நூலை வெளி யிட்டுள்ளார்கள்.

இந்த கட்டுறையின் சில கருத்துக்களுக்கு சான்றுகள் மேற்குறிப்பிட்ட நூல்களில் உள்ளன. ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர், ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் பிறந்த வருடம், வாழ்ந்த காலம் பற்றிய விவரங்கள் திட்டவட்டமாக தெரியவில்லை. ஆராய்ச்சியாளர் பல கட்டுரைகளை எழுதியிருப்பினும் முரண்பாடுகளும் கருத்து வேறுபாடுகளும் உள்ளன. ***இருப்பினும் நமது ஜகத் குருவின் வாக்கே பிரமாணம், அதுவே ஸத்யம் என்ற அடிப் படையில் இந்தக் கட்டுறை ஸமர்ப்பிக்கப் படுகிறது***

\கீழ்க்கண்டவை காலகட்ட நிர்ணயத்தில் கருத்தில் கொள்ளப்பட்டன.

*1) அம்மன்தரிசனம் சித்திரை மலரில் வெளியான **மஹாகவி ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரும் ஸ்ரீ சிருங்கேரி மடமும்**. கட்டுரையில் குறிப்பிட்டுள்ள தெய்வசெயல்புரம் நாடி ஜோதிடத்தில் கிடைத்த ஸ்ரீ நீலகண்டரின் ஜாதகத்தில், அவர் பிறந்தது **ஜய** ஆண்டு என்று தெரிகிறது. ஜய ஆண்டு **60** வருடங்களுக்கு ஒரு முறை வருவதால் இவர் பிறந்தது **1594** அல்லது **1654** ஆகவே இருக்க வேண்டும்.*

| May 1594 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Sun | Mon | Tue | Wed | Thu | Fri | Sat |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

**Date of birth ( 23 / 05 / 1594 )**

**ஜய வருஷம், வைகாசி மாதம், 8 ம் தேதி பௌர்ணமி திதியன்று திங்கள் கிழமை, அனுஷ நக்ஷத்திரத்தில், ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர் அவதரித்தார்.**

| | | | |
|---|---|---|---|
| சுக்<br>ராகு | | சூ, பு<br>வி | |
| செ | ஆதியில் சனி<br>தசை இருப்பு<br>**3** வ **10**மா **5** நா | | |
| | | | ல |
| | சந் | | சனி<br>கேது |

ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர் ஜாதகம்

*2) மதுரையை ஆண்ட திருமலைநாயக்க மன்னனின் ஆட்ச்சிக்காலம் **1623** ம் ஆண்டிலிருந்து **1659** வரை, என்பதற்கு சரித்திரச்சன்றுகள் உள்ளன. ஸ்ரீ நீலகண்டர் வாலிப பருவத்தில் மதுரை மன்னால் அமைச்சர் பதவியில் அமர்த்தப்பட்டு பல ஆண்டுகள் பணி புரிந்தார். ஓய்வு பெற்று மன்னனால் தமக்கு மான்யமாக அளிக்கப்பட்ட தாம்ரபர்ணி நதிக்கரையில் அமைந்துள்ள பாலமடை கிராமத்தில் குடியேறி தமது அந்திம காலத்தை அங்கே கழித்தார். தமது எழுபதாம் வயதில் மார்கழி மாதம் சுக்ல அஷ்டமி அன்று மஹாஸித்தி அடைந்து ப்ரம்ம பூதரானார். ஆகவே ஸ்ரீ நீலகண்டர் பிறந்தது **1594** ம் ஆண்டு என்று நிர்ணயிக்கலாம்.*

*3) ஸ்ரீமத் அப்பைய்ய தீக்ஷிதர் தமது 72 வது வயதில் சிதம்பர க்ஷேத்திரத்தில் ப்ரம்மபூதராக ஆனார் என்றும், அப்போது நீலகண்டருக்கு வயது 12 என்றும் பல ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவர் வேலூரை ஆண்ட **சின்ன பொம்ம நாயக்க மன்னனின்** ராஜ குருவாக பல ஆண்டுகள் பணி புரிந்துள்ளர். அடையப்பலம் ஸ்ரீ காலகண்டேச்வரர் கோயில் மன்னனின் உதவியோடு **1578** ம் ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரால் கட்டப்பட்டது. ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் **1534** ம் ஆண்டு பிறந்து **1606** ம் ஆண்டு ஸித்தி அடைந்தார் என்று நிர்ணயிக்கலாம்.*

பெரியோர்களால் பரமேச்வரனின் அம்சாவதரமாக போற்றப்படும் ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் தலை சிறந்த அத்வைதாசார்யருள் ஒருவராவார். சிருந்கேரி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் 1957 ல் பாலமடைக்கு விஜயம் செய்தபோது ஸ்ரீ அப்பைய்யதீக்ஷிதரையும் நீலகண்டதீக்ஷிதரையும் ***பரமசாம்பவர்கள்*** என்றும் ***ப்ராதஸ்மரணீயாள்*** (காலை எழுந்தவுடன் ஸ்மரிக்கத்தக்கவர்கள்) என்று குறிப்பிட்டார்கள். ஜககுரு இதைச் சொன்னபோது நாங்கள் இம்மஹான்களின் மஹத்வத்தை நினைத்து பக்தி பரவசப்பட்டோம். ஸ்ரீ நீலகண்டர் தமது பெரிய பாட்டனாரை பற்றி தமது **சிவலீலார்ணவ மஹாகாவ்யத்தில்**

श्रीमद्भरद्वाजकुलजलधिकौस्तुभश्रीकण्ठमत प्रतिष्ठापनाचार्य चतुरधिकशतप्रबन्धनिर्वाहक श्रीमन्महाव्रतयाजि श्रीमदप्पय्यदीक्षितेन्द्राः

***“பரத்வாஜ குலமென்ற கடலில் கௌஸ்துப மணி போல் ஜ்வலிப்பவரும், ஸ்ரீகண்ட மதப்ரதிஷ்டாபனாசார்யரும், நூற்றுநான்கு கிரந்தங்களை இயற்றிய, மஹாவ்ரதயாஜி ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதேந்திராள்*** ” என்று கூறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரின் நூற்றிற்கு மேல்பட்ட கிரந்தங்களில் மிகப் பிரஸித்தி பெற்றவை. **சிவார்க்க மணி தீபிகையும்**. (இதனை பராட்டி ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதருக்கு **ஸ்ரீகண்டமதபப் பிரதிஷ்டாபனாசார்யர்** என்ற பட்டம் அளிக்கப் பட்டது), மற்றும் தலை சிறந்த அத்வைத கிரந்தமுமான **பரிமளமும்** ஆகும். அவரியற்றிய மற்ற எல்லா நூலகளையும் விவரிக்க இங்கு அவகாசமில்லை,

**Sri Appayya Dikshtar Trust** என்ற அறக் கட்டளை, ஜம்மு காஷ்மிர் முன்னாள் தலைமை நீதிபதியும், ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரின் வம்சத்தில் வந்தவருமான ஸ்ரீ ரத்னமய்யர் தலைமையில் **Pilathope, Myalapore, Chennai 600004,** என்ற முகவரியில் இயங்கி வருகிறது. ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரின் கிரந்தங்ளில் ப்ரசுரமானவை பற்றிய விவரங்களை இங்கு அறியலாம்.

ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதர் அநேக ஸித்திகளைப் பெற்ற மஹான். பல சந்தர்ப்பங்களில் இது வெளிப்பட்டுள்ளது. வேலூர் மன்னன் சின்ன பொம்ம நாயக்கனின் விருப்பப்படி, அவனுதவியுடன் விரிஞ்சிபுரம் மார்கபந்தீஸ்வரர் தேவாலயநிறுவனம், வேலூர் ஸ்ரீ காலகண்டேச்வரர் தேவாலயநிறுவனம், முதலான பல நற்பணிகளை செய்து முடித்தார். இதனால் மிக்க மகிழ்ச்சி அடைந்த மன்னன் அவருக்கு கனகாபிஷேகம் செய்வித்தான். விலைமதிப் பதற்கரிய ஒரு பொன்னாடையை அணிவித்து அவரை கௌரவித்தான். மறுநாள் காலையில் ஸ்ரீ தீக்ஷிதர் தாம் செய்த அக்னி ஹோத்திரத்திலே மன்னன் தமக்களித்த பொன்னாடையை ஆஹுதி செய்துவிட்டார் பொறாமை உணர்ச்சியால் சிலர் இதை மன்னனிடம் தெரிவித்தனர், மன்னனும் மனம் வருந்தி, மிக்க தயக்கத்துடன் ஸ்ரீ தீக்ஷிதரை இது பற்றி விசாரித்தபோது அவர் **“ராஜனே, நீ எனக்களித்த பொன்னாடை விலைமதிப்பதற்கரியது. என்னை விட அதை அணியும் அதிக தகுதியுள்ள சிதம்பரம் நடராஜருக்கு அளித்து விட்டேன்”** என்று கூறினார். இதனால் சமாதானமடையாத மன்னன், சில வீரர்களுடன் அன்றிரவே பிரயாணம் செய்து அதிகாலையில் சிதம்பரத்தை அடைந்து நீராடி தேவாலயத்திற்கு விரைந்தான். அங்கு ஸ்ரீ நடராஜபெருமானின் பூட்டிய ஸன்னதி முன் கூடியிருந்த தில்லை மூவயிரத்தார் மிக்க பரபரப்புடன் காணப் பட்டனர். விசாரித்தபோது, தலைமை தீக்ஷிதர்

“மன்னரே! இன்று அதிகாலை வழக்கம் போல் நடை திறக்க வந்தபோது, ஒரு அற்புதமான பொன்னாடை நடராஜாவின் விக்கிரகத்தின் மேல் இருந்தது. எப்படி இது நிகழ்ந்தது என்று எங்களுக்கு தெரியவில்லை ” என்று கூறினார். மன்னனும் கூர்ந்து கவனித்தபோது அது, தான் ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதருக்கு அளித்த அதே பொன்னாடை என்பதை உணர்ந்து, உணர்ச்சி மேலிட்டு பக்தி பரவசத்துடன் “ *பொன்னம் பலத்தோனே! நடராஜ பெருமானே நின் கருணையை என்னவென்று சொல்வேன். நின்னருளன்றோ ஸ்ரீ அப்பைய்யதீக்ஷிதரை நான் குருவாக அடைந்தது!* ” என்று கூறி வணங்கினான். ஸ்ரீ ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதிகள் ஸர். ஸீ. பீ. ராமஸ்வாமி ஐயர் முதலிய பிரஸித்தி பெற்ற பல பெரியோர் இவர் வம்சத்தில் வந்துள்ளனர்.

ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரின் இளைய சகோதரரும் ஸ்ரீ நீலகண்டரின் பாட்டனாரும் மஹாவித்வானுமான ஸ்ரீ ஆச்சான் தீக்ஷிதர், ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதருடன் சின்ன பொம்ம நயக்கனின் சபையை அலங்கரித்தார். ஒரு ஸமயம் விஜயநகர மன்னராகிய கிருஷ்ணதேவ ராயர் தன் பட்டமகிஷியுடன் காஞ்சிபுரம் வரதராஜ பெருமாளை தரிசிக்க வந்தபோது அங்கிருந்த ஸ்ரீ ஆச்சான் தீக்ஷிதரை ஒரு சுலோகம் கவனம் செய்யும்படி வேண்டிக் கொண்டான். பின் வரும் சுலோகத்தை ஸ்ரீ ஆச்சான் தீக்ஷிதர் இயற்றினார்.

काञ्चित् काञ्चन गौराङ्गीं वीक्ष्य साक्षादिव श्रियम् ।
वरदः सम्शयोपन्नो वक्षस्थलमवेक्षते ॥

காஞ்சித் காஞ்சன கௌராங்கீம் வீக்ஷ்ய
ஸாக்ஷாதிவ ச்ரியம் |
வரத: ஸம்சயோபன்ன: வக்ஷஸ்தலமவேக்ஷதே ||

“தன் முன் ஸர்வாபரண பூஷிதையாய் ஸாக்ஷாத் லக்ஷ்மியை போல் வந்து நிற்கும் ஒரு அழகிய பெண்மணியை (கிருஷ்ணயதேவராய மன்னனின் மஹிஷியை ) கண்டதும் வரதராஜ பெருமாள் ஸந்தேகம் கொண்டவராய் தனது மார்பை பார்த்துக் கொண்டார் ” என்பது சுலோகத்தின் பொருள். ஸாக்ஷாத் லக்ஷ்மி தேவியே தன் மர்பை விட்டகன்று எதிரிலே நிற்கின்றாளோ என்று பெருமாளுக்கே ஸந்தேகம் ஏற்பட்டதாம். விஜயநகர மன்னன் மிக்க மகிழ்ச்சி அடைந்து அவரை பலவாராக கௌரவித்து அவருக்கு **வக்ஷஸ்தல தீக்ஷிதர்** என்ற பட்டத்தையும் சூட்டினான்.

ஸ்ரீ நீலகண்டரின் தந்தை ஸ்ரீ ரங்கராஜத்வரியும் ஒரு சிறந்த வித்வானாக விளங்கினார்..

தனது சிறு பிராயத்திலேயே தந்தையையும், பாட்டனாரையும் இழந்ததால், ஸ்ரீ நீலகண்டர் தமது பெரிய பாட்டனார் ஸ்ரீமத் அப்பைய்ய தீக்ஷிதரால் வளர்க்கப்பட்டார். பெரிய பாட்டனாரின் காலத்திற்குப்பிறகு பல இடங்களில் சஞ்சரித்து ஸ்ரீ வேங்கடமகி போன்ற மஹான்களிடமிருந்து சாஸ்த்ர, வேத, வேதாந்த ரஹஸ்யங்களை நன்கு கற்றுணர்ந்த ஸ்ரீ நீலகண்டர், மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னனின் அமைச்சராக நியமிக்கப் பட்டார். மதுரை மன்னனின் விருப்பப்படி அவன் உதவியோடு பல தேவாலயங்களை நிர்மாணித்து மற்றும் பல நற்பணிகளை செய்து முடித்தார்..

திருமலை மன்னன் ஒரு சமயம் தன் பட்டமஹிஷியின் சிலையை வடிவமைக்க ஒரு சிறந்த சிற்பியை அமர்த்தினான். மிக்க கவனத்துடன் சிலையை செதுக்கும்போது, துடைப் பக்கம் வரும்போது ஒரு சிறு செதிள் பெயர்ந்து விட்டது. இதனால் கவலை அடைந்த சிற்பி வேறொரு கல்லை தேர்ந்தெடுத்து இன்னுமதிக கவனத்தோடு பணியை செய்துங்கூட அதே இடத்தில் செதிள் பெயர்ந்து விட்டது. மனமுடைந்த சிற்பி, அன்னை மீனக்ஷியை ஆராதிக்க அவ்வழியே போய்கொண்டிருந்த ஸ்ரீ நீலகண்டரை கண்டு, அவர் கால்களில் விழுந்து வணங்கி நடந்ததை உரைத்தான். ஸ்ரீ தீக்ஷிதர், “அப்பனே! நீ கலைமகளின் பரிபூர்ண அருளை பெற்றவன். வடித்த சிலை அப்படியே இருக்கட்டும் “ என்று கூறிவிட்டார், சிலை திறப்பு விழாவின் போது மன்னன் துடை பாகத்தில் உள்ள பின்னத்தை கண்டு திடுக்கிட்டு அதுபற்றி சிற்பியை விசாரித்தான். அவன் நடந்த விவரங்களை கூறினான். ராணியின் தொடையில் ஒரு தழும்பு இருந்ததால் மன்னனின் மனதில் மந்திரியை பற்றி ஒரு விகல்பமான எண்ணம் ஏற்பட்டது. மறுநாட்காலையில் நீலகண்டரின் கண்களை பறித்து தண்டிக்க எண்ணி, உடன் அவரை அழைத்து வர ஏவலர்களை அனுப்பினான். ஸ்ரீ நீலகண்டர் நித்திய பூஜையில் ஈடுபட்டிருந்ததை கண்டு ஏவலர் அறை வாயிலிலேயே காத்திருந்தனர்.. பூஜை முடிவில் கற்பூர ஆரத்தியின் போது ஸ்ரீ நீலகண்டர் அதிக கற்பூரத்தை உபயோகித்து அந்த ஜுவாலயில் தன் கண்களை அவித்துக்கொண்டு, ஏவலரிடம் மன்னிடம் சென்று “நீங்கள் நினைத்ததை மந்திரியே செய்து கொண்டார்” என்று சொல்லுங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார். மன்னன் இதைக்கேட்டு ஓடோடி வந்து ஸ்ரீ நீலகண்டரின் காலில் விழுந்து வணங்கி தன் அபசாரத்தை பொறுத்து மன்னிக்குமாறு

வேண்டினான். தன் மனதிலுள்ளதை அவர் எப்படி அறிந்தார் என்று வினவ, "அன்னை மீனாக்ஷியின் அருளால் எப்படி உன் மஹிஷியின் தொடையிலுள்ள தழும்பை அறிந்தேனோ அதே அருளால் தான் " என்று நீலகண்டர் பதிலளித்தார். பச்சாதாபத்தால் பரிதவிக்கும் மன்னனை கண்டு ஸ்ரீ நீலகண்டர், அருள்மிகு அன்னை மீனாக்ஷியை நூற்றெட்டு சுலோகங்கள் அடங்கிய அதி அற்புதமான **ஆனந்தஸாகரஸ்தவத்தால்** மனமுருகி துதித்தார்.



ஸ்ரீ காலகண்டேஸ்வரர் ஆலயம், அடையப்பலம்

கீழ்கண்ட அறுபத்தொன்றாம் சுலோகத்தை அவர் பாடும்போது அன்னையின் அருளால் தன் கண் பார்வையை திரும்பப் பெற்றார்.

अव्याजसुन्दरमनुत्तरमप्रमेयम्
अप्राकृतं परमङ्गळमङ्घ्रिपद्मम् ।
संदर्शयेदपि सकृद्भवती दयार्द्रा
द्रष्टास्मि केन तदहं तु विलोचनेन ॥

அவ்யாஜஸுந்தரம் அனுத்தரம் அப்ரமேயம்
அப்ராக்ருதம் பரமமங்களமங்க்ரி பத்மம்
ஸந்தர்சயேதபி ஸக்ருத் பவதீ தயார்த்ரா
த்ராஷ்டாஸ்மி கேன ததஹம் து விலோசனேன



அருள்மிகு மீனாக்ஷி கோயிலிலுள்ள பொற்றாமரை குளம், மதுரை

அன்னையே! என்மீது அபரிமித கருணை கொண்டு, அளவற்ற அழகுடையதும், ஈடு இணையற்றதும், வர்ணிக்கமுடியாததும், பரம மங்களமானதுமான, உன் சரணாரவிந்தங்களை காட்டினாலும் எந்த கண்களால் அதனை காண்பேன்.

**ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரை நினைவில் கொண்டு அன்னை மீனாக்ஷியை எவரெவர் இந்த சுலோகத்தால் பக்தியுடன் துதிக்கிறார்களோ அவரெல்லோரும் எல்லா விதமான கண் நோய்களிலிருந்தும் விடுபட்டு குணமடை கிறார்கள் என்பது மஹனீயர் வாக்கு .**

இதனால் பலர் பயனடைந்துள்ளனர்.

அமைச்சர் பதவியிலிருந்து விலக நிச்சயித்த ஸ்ரீ நீலகண்டர், மன்னனின் வேண்டுக்கோளுக் கிணங்க அவன் ராஜ்யத்திலேயே தம் எஞ்சிய வாழ்நாட்களை கழிக்க சம்மதித்து, மன்னன் மான்யமாக அளித்த, தாம்ரபர்ணி நதிக்கரையில் அமைந்துள்ள பலாமடை கிராமத்தில் தம் குடும்பத்தாரோடு குடியேறினார். கடைசி நாட்களில் துறவு பூண்டு **1664** ல் மார்கழிமாத சுக்லபக்ஷ அஷ்டமியன்று ப்ரம்மபூதரானார். அவர் அதிஷ்டானத்தில் பாலமடையில் ஆண்டு தோறும் ஆரதனை, ஜயந்தி உத்ஸவங்கள் சிறப்பாக நடை பெறுகின்றன.